**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590


**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 4147/E/2020**

திரு.நா.கோவிந்தராஜ் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 25.01.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வடக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமம், திருவண்ணாமலை ஊராட்சி ஆண்டாள்புரம் கிராமத்தில் சர்வே எண்கள்.282/1, 282/3 மற்றும் 283ல் அரசு புறம்போக்கு நிலத்தில் திரு.மா.அழகர்சாமி என்பவர் கான்கிரீட் வீடும் மற்றம் தகர வீடும் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டக்குழு தலைவர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை கடித எண்.ந.க.எண்.ஆ2/4112/2018 நாள்.31.05.2016ன்படி ஆக்கிரமிப்பினை அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு முழுவதும் அகற்றப்பட்டுள்ளதா என்ற விபரம், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை என்றால் அகற்றப்படாததற்கான காரணம் உள்ளிட்ட 9 இனங்களில் தகவல்களைக் கோரியதன்பேரில், பொதுத் தகவல் அலுவலர் தனக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை என்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் 06.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு

19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். தொடர்ந்து 16.05.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்த மேல்முறையீட்டாளர்களின் மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட்ட நிலையில், திருவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் 21.10.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் கோரிய இனங்களுக்கான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு 17.09.2020 தேதியிட்ட கடிதத்தில் தகவல்களை பதிவஞ்சலில் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய தகவலை இவ்வாணையம் ஏற்கவில்லை. ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் வழங்கப்பட வேண்டிய தகவல் என்றே ஆணையம் தீர்மானித்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் 25.01.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளர் 25.01.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை குறிப்பிட்ட நாட்களுக்குள் வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படுமென்பது தெரிவிக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 4147/E/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு.நா.கோவிந்தராஜ்,
த/பெ.கோ.நாராயணன்,
எண்.86, ஆண்டாள்புரம்,
திருவண்ணாமலை ஊராட்சி,
ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் - 626 125.

Copy to: Judgement File.
*"VP / PA -09.11.2020"*